Government of India
Press Information Bureau

International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

# JIPMER Successfully Conducts Two-Day Basic Ilizarov Workshop

प्रविष्टि तिथि: 04 APR 2026 1:25PM by PIB Chennai

The Department of Orthopaedics at JIPMER successfully organised a two-day "Basic Ilizarov Workshop". The programme marked a significant academic and clinical milestone, reinforcing JIPMER's role as a leading centre for advanced orthopaedic training in South India.




The workshop was organised by the Department of Orthopaedics, JIPMER, under the leadership of Dr. Suresh Gandhi B, Professor and Head of the Department, who served as the Organising Chairman, and Dr. Pasupathy P, Organising Secretary. The programme witnessed enthusiastic participation from nearly 50 young orthopaedic surgeons and postgraduate trainees representing various states across South India. The event featured a well-structured blend of didactic lectures and hands-on training sessions, enabling participants to actively engage with faculty and gain practical insights into the Ilizarov technique. The seamless execution of the workshop reflected the dedicated efforts of the organising team, faculty, and staff of the Department.

A distinguished panel of 10 eminent faculty members from across the country contributed to the academic sessions. Notably, Dr. Mangal Parihar (Mumbai) and Dr. Vasudevan P. N. (Kerala) served as the lead faculty, bringing extensive expertise and clinical experience to the programme.

The Ilizarov technique is a specialised orthopaedic method used to reconstruct bones, increase bone length, and correct deformities. It involves the use of a circular external frame made of rings, wires, and rods that is attached outside the limb. This device gradually applies controlled tension to the bone, which stimulates the growth of new bone tissue — a process known as distraction osteogenesis. Developed by Dr. Gavriil Ilizarov, this method is widely used for treating complex fractures, non-healing bones, limb length differences, and deformities.

The workshop provided comprehensive training in the application of this technique for managing complex fractures, limb deformities, and limb length discrepancies. By strengthening the skills of young orthopaedic professionals, the initiative is expected to significantly enhance access to specialised orthopaedic care in diverse regions, ultimately benefiting the public at large.

The Department of Orthopaedics, JIPMER, remains committed to advancing orthopaedic education through a structured training pathway—beginning with foundational programmes such as the Basic Ilizarov Workshop and progressing towards advanced-level courses in the coming years. This initiative aims to build sustained expertise in complex limb reconstruction and deformity correction techniques among orthopaedic professionals.

Link: https://www.pib.gov.in/PressReleaseDetail.aspx?PRID=2248927&reg=6&lang=1

Government of India
Press Information Bureau
International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

# ஜிப்மரில் இரண்டு நாள் “அடிப்படை இலிசரோவ் பயிற்சி பட்டறை” வெற்றிகரமாக நடைபெற்றது

प्रविष्टि तिथि: 04 APR 2026 1:25PM by PIB Chennai

ஜிப்மர் எலும்பியல் துறை சார்பில் இரண்டு நாள் “அடிப்படை இலிசரோவ் பயிற்சி பட்டறை” வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வு தென்னிந்தியாவில் மேம்பட்ட எலும்பியல் பயிற்சிக்கான முக்கிய கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை நிகழ்வாக அமைந்தது.




இந்த பயிற்சி பட்டறை, ஜிப்மர் எலும்பியல் துறை மூலம், துறைத் தலைவர் டாக்டர் சுரேஷ் காந்தி பி. அவர்களின் தலைமையிலும், டாக்டர் பசுபதி பி. அவர்களின் ஒருங்கிணைப்பிலும் சிறப்பாக நடத்தப்பட்டது. தென்னிந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 50 இளம் எலும்பியல் மருத்துவர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் இதில் பங்கேற்றனர். விரிவுரைகள் மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் இணைந்து நடைபெற்ற இந்த நிகழ்வில், பங்கேற்பாளர்கள் நிபுணர்களுடன் நேரடியாக கலந்துரையாடி இலிசரோவ் முறையின் நடைமுறை பயன்பாடுகளை ஆழமாக அறிந்தனர். இந்த நிகழ்வின் சிறப்பான நடைமுறைப்படுத்தல், எலும்பியல் துறை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பையும் ஒருங்கிணைப்புத் திறனையும் வெளிப்படுத்தியது.

இந்த பயிற்சியில் நாடு முழுவதும் இருந்து 10 முன்னணி நிபுணர்கள் ஆசிரியர்களாக பங்கேற்றனர். குறிப்பாக மும்பையைச் சேர்ந்த டாக்டர் மங்கள்பாரிஹார் மற்றும் கேரளாவைச் சேர்ந்த டாக்டர் வாசுதேவன் பி. என். ஆகியோர் முதன்மை ஆசிரியர்களாக இருந்து தங்கள் விரிவான அனுபவத்தை பகிர்ந்தனர்.

“இலிசரோவ் முறை” என்பது எலும்புகளை மீண்டும் உருவாக்க, நீளத்தை அதிகரிக்க மற்றும் வளைவு/வடிவ மாற்றங்களைச் சரிசெய்ய பயன்படும் ஒரு சிறப்பு எலும்பியல் சிகிச்சை முறை ஆகும். இதில் வளைய வடிவ வெளிப்புற கருவிகள் (ரிங், கம்பி, ராட் போன்றவை) உடலின் வெளியே பொருத்தப்பட்டு, மெதுவாக கட்டுப்படுத்தப்பட்ட இழுப்புச் சக்தி வழங்கப்படுகிறது. இதன் மூலம் புதிய எலும்பு வளர்ச்சி தூண்டப்படுகிறது; இதை ‘Distraction Osteogenesis’ என அழைக்கப்படுகிறது. இந்த முறையை ரஷ்ய மருத்துவர் கவ்ரியல் இலிசரோவ் உருவாக்கினார். சிக்கலான எலும்பு முறிவுகள், ஆறாத எலும்புகள், அங்க நீள வேறுபாடு மற்றும் வடிவ மாற்றங்கள் போன்ற சிகிச்சைகளில் இது பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த பயிற்சி பட்டறை, சிக்கலான எலும்பு முறிவுகள், அங்க வடிவ மாற்றங்கள் மற்றும் அங்க நீள வேறுபாடுகளைச் சிகிச்சையளிக்கும் திறன்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. இத்தகைய பயிற்சிகள் மூலம் இளம் மருத்துவர்களின் திறன் மேம்பட்டு, பொதுமக்களுக்கு மேம்பட்ட எலும்பியல் சிகிச்சைகள் எளிதில் கிடைக்க உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜிப்மர் எலும்பியல் துறை, இவ்வகை அடிப்படைப் பயிற்சிகளில் இருந்து தொடங்கி, எதிர்காலத்தில் மேம்பட்ட உயரிய பயிற்சிகளை அளித்து, எலும்பியல் துறையில் மருத்துவர்களின் நிபுணத்துவத்தை மேலும் வலுப்படுத்த உறுதியாக உள்ளது. இது அங்க மறுசீரமைப்பு மற்றும் வடிவ திருத்த சிகிச்சைகளில் மருத்துவர்களின் திறன் வளர்ச்சியை மேம்படுத்தும் முயற்சியாகும்.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2248928&reg=3&lang=2

தினமலர்
புதுச்சேரி | ஞாயிறு | 5.4.2026

# ஜிப்மரில் பயிற்சி பட்டறை

புதுச்சேரி, ஏப். 5–

ஜிப்மரில் இரண்டு நாள் அடிப்படை இலிசரோவ் சிகிச்சை குறித்த பயிற்சி பட்டறை' நடந்தது.

"இலிசரோவ் முறை" என்பது எலும்புகளை மீண்டும் உருவாக்க நீளத்தை அதிகரிக்க மற்றும் வளைவு' வடிவ மாற்றங்களைச் சரி செய்யப் பயன்படும் ஒரு சிறப்பு எலும்பியல் சிகிச்சை முறை ஆகும். இதில், வளைய வடிவ வெளிப்புற கருவிகள் (சிங். கம்பி, ராட் போன்றவை) உடலின் வெளியே பொருத்தப்பட்டு, மெதுவாக கட்டுப்படுத்தப்பட்ட இழுப்புச் சக்தி வழங்கப்படுகிறது.

இதன் மூலம் புதிய எலும்பு வளர்ச்சி தூண்டப்படுகிறது. இந்த முறையை ரஷ்ய மருத்துவர் கவ்ரியல் இலிசரோவ் உருவாக்கினார். சிக்கலான எலும்பு முறிவுகள், ஆறாத எலும்புகள், அங்க நீள வேறுபாடு மற்றும் வடிவ மாற்றங்கள் போன்ற சிகிச்சைகளில் இது பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த இலிசரோவ் சிகிச்சை குறித்து இரண்டு நாள் பயிற்சி பட்டறை, ஜிப்மரில் நடந்தது. நிகழ்ச்சிக்கு, ஜிப்மர் எலும்பியல் துறை சார்பில், நடந்த நிகழ்ச்சியில், துறைத் தலைவர் கூரேஷ் காந்தி தலைமை தாங்கினார். டாக்டர் பசுபதி ஒருங்கிணைப்பு செய்தார்.

இப்பயிற்சியில், மும்பையைச் சேர்ந்த டாக்டர் மங்கள் பாரிஹார், கேரளாவைச் சேர்ந்த டாக்டர் வாசுதேவன் ஆகியோர் முதன்மை ஆசிரியர்களாக இருந்து தங்கள் விரிவான அனுபவத்தை பகிர்ந்தனர். இந்நிகழ்வு, தென் இந்தியாவில் மேம்பட்ட எலும்பியல் பயிற்சிக்கான முக்கிய கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை நிகழ்வாக அமைந்தது.

இதில், தென்னிந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 50 இளம் எலும்பியல் மருத்துவர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் பங்கேற்றனர். விரிவுரைகள் மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் இணைந்து நடை பெற்ற இந்த நிகழ்வில், பங்கேற்பாளர்கள், நிபுணர்களுடன் நேரடியாக கலந்துரையாடி இலிசரோவ் முறையின் நடை முறை பயன்பாடுகளை அறிந்தனர்.